


1998-ம் ஆண்டுக்கு முன்னதாகத் தயாரிக்கப்பட்டு, 2002-ம் ஆண்டு ஆப்கன் காடுகளில் அமெரிக்க - பிரிட்டன் கூட்டு ராணுவப் படையினரால் கண்டெடுக்கப்பட்ட அல் காயிதாவின் பயிற்சிக் கையேடு, பல வியப்பூட்டும் தகவல்களையும் அதிர்ச்சிகளையும் கொண்டது. இப்படியெல்லாம் யோசிப்பார்களா, இப்படிக்கூடச் செய்யமுடியுமா, இப்படியும் ஒரு மனநிலை சாத்தியமா என்று பக்கத்துக்குப் பக்கம், வரிக்கு வரி நம்மை தூக்கிவாரிப்போடச் செய்கிற ஒரு தீவிரவாத நோட்ஸ் அது.

'ஐமன் அல் ஜவாஹிரி, முஹம்மது அடீஃப், காலீத் ஷேக் முகம்மது போன்ற சிலரது துணையுடன் ஒசாமா பின்லேடனே உட்கார்ந்து தயாரித்த நோட்ஸ்' என்று சில மத்தியக் கிழக்குப் பத்திரிகையாளர்கள் முன்னெப்போதோ எழுதியிருக்கிறார்கள். அதெல்லாம் குருட்டாம்போக்கில் சொல்லப்படும் விஷயங்களாகத்தான் இருக்கவேண்டும். தக்க ஆதாரம் ஏதும் கிடையாது. ஒசாமா பின்லேடனோ, வேறு யாரோ! நூலாசிரியர் யார் என்பதா இதில் முக்கியம்?

ஆனால் ஒன்று நிச்சயம். மிகப்பெரிய ராணுவ, உளவு மூளைகள் சம்பந்தப்படாமல், இப்படியொரு கையேட்டைத் தயாரித்திருக்கவே முடியாது.

ஆப்கனிஸ்தான் காடுகளில் அமெரிக்கக் கூட்டு ராணுவப் படைகள், ஒசாமாவையும் அந்தக் கண்ணில்லாத தாலிபன் தாத்தா.. அவர் பேர் என்ன.. ஆங், முல்லா முஹம்மது ஓமர்.. அவரையும் சேர்த்துத் தேடிக்கொண்டு கொஞ்ச நாளை வெத்துக்குக் கழித்தார்கள் அல்லவா? அப்போது அகப்பட்டதுதான் இந்த நோட்ஸ்.

நல்ல சுத்தமான அக்மார்க் அரபியில் எழுதப்பட்டு, மிகப் புராதனமான அச்சுக் கோக்கும் முறைப்படி அச்சடிக்கப்பட்டு, பின் செய்யப்பட்டிருந்தது. அமெரிக்க வீரர்களுக்கோ, பிரிட்டிஷ் படையினருக்கோ, அதில் ஓர் அட்சரம் கூடப் புரியவில்லை. முதல் முதலில் கண்டெடுத்தவர்கள் என்கிற முறையில்; பிரிட்டிஷ் வீரர்கள்தான் அந்த நோட்ஸை எடுத்துக்கொண்டு போனார்கள். ராணுவ அதிகாரிகளும் மொழிபெயர்ப்பு நிபுணர்களும் டிகோடிங் ஸ்பெஷலிஸ்டுகளும் உட்கார்ந்து, அதில் என்ன எழுதப்பட்டிருக்கிறது என்று தோண்டித் துருவிப் பார்க்கத் தொடங்கினார்கள்.

ம்ஹூம். ஒன்றும் பெயரவில்லை. புரியாத பாடங்களைப் புரிய வைப்பதற்குத்தான் நோட்ஸ். ஆனால், நோட்ஸே புரியவில்லை என்றால்? அரபிதானா அது என்றால், அரபிதான். ஆனால், ஒரு வார்த்தை புரியவேண்டுமே? அத்தனையும் சங்கேத வார்த்தைகள்!

முற்று முழுக்க சங்கேத வார்த்தைகளாலேயே ஒரு நோட்ஸ்! என்ன சைஸ் என்று நினைக்கிறீர்கள்? ஒரு முழு குமுதம் ரிப்போர்ட்டர் சைஸ். என்ன ஒன்று, நடுப்பக்கக் கவர்ச்சிப்

படம் மட்டும் கிடையாது.

மிக நீண்ட போராட்டத்துக்குப் பிறகும் பிரிட்டிஷ் அதிகாரிகளால், அந்த நோட்ஸை மொழிபெயர்த்துப் புரிந்துகொள்ள முடியாமல் போய்விடவே, வேறு வழியின்றி அமெரிக்க உதவியைக் கேட்டார்கள். மத்தியக் கிழக்கிலிருந்து பல மொழி வல்லுநர்களையெல்லாம் வரவழைத்து, வார்த்தை வார்த்தையாகப் பெயர்த்துப் போட்டு, ஒருவழியாகப் படிக்க முடிந்தபோது, அதிர்ச்சியில் வாயடைத்துவிட்டார்கள்.

உலகில் வேறு எந்த ஒரு தீவிரவாத இயக்கமும் அத்தனை துல்லியமாகப் போர்த் தந்திரங்களைப் பாடமாக எழுதிப் பயிற்றுவிப்பதில்லை. வேறு எந்த இயக்கமும் இத்தனை தீவிரமாகக் கொள்கையே உயிரும் உடலுமாக வாழ்வதுமில்லை. (எல்லா இயக்கங்களும் ஏதோ ஒரு சந்தர்ப்பத்திலாவது, அமைதிப் பேச்சுவார்த்தைக்குப் போய் உட்காரும். என்றைக்காவது அல் காயிதா உட்கார்ந்திருக்கிறதா?) வேறு எந்த இயக்கமும் இத்தனை சூட்சுமங்களைப் பயிற்றுவிப்பதுமில்லை.

அல் காயிதாவின் அந்தப் பயிற்சிப் புத்தகத்தில் அப்படி என்ன இருக்கிறது? பார்க்கலாம். உலகெங்கும் இஸ்லாமியர்கள் மேற்கத்திய நாடுகளைச் சேர்ந்தவர்களால் பழிவாங்கப்படுகிறார்கள். இஸ்லாமியப் பெண்களை எண்ணி எண்ணி விதவைகளாக்குகிறார்கள். உணவுக்கு, உறைவிடத்துக்கு, வருமானத்துக்கு, வாழ்க்கைக்கு வழியின்றி ஊர் ஊராக ஓடவிடுகிறார்கள். மத்தியக் கிழக்கின் எண்ணெய் வளத்தையெல்லாம் மேலை நாடுகள் அபகரிக்கப் பார்க்கின்றன. எதிர்த்துப் பேச திராணியற்ற அரசாங்கங்களே அங்கு இருக்கின்றன. ஆகவே, சர்வதேச இஸ்லாமிய சமூகத்தின் நலனுக்காக நாம் ஜிஹாத் செய்வோம் என்கிற அறைகூவலுடன் ஆரம்பமாகிறது பாடம்.

எதிரி யார்? நேரடியாகச் சொல்லப்படவில்லை என்றாலும், அமெரிக்கா மற்றும் அதன் கூட்டணி தேசங்களைத்தான், இக்கையேடு தங்கள் எதிரிகளாகச் சொல்கிறது. இதனுடன் யூதர்களையும் சேர்த்துக்கொள்கிறது.

இந்த எதிரிகளை ஒழிப்பதற்காகப் புறப்பட்ட ஒரு ராணுவ இயக்கமாகத் தங்களை அடையாளம் காட்டிக்கொண்டு, ஒரு ராணுவ இயக்கத்துக்கு என்னென்ன தேவை என்று முதல் பாடம் ஆரம்பமாகிறது.

தெளிவான செயல்திட்டம், தேர்ந்த கமாண்டர்கள், அவர்களுக்கு வழிகாட்டும் தனி கவுன்சில். நன்கு பயிற்றுவிக்கப்பட்ட ராணுவம்.

இந்த ராணுவம் என்னென்ன செய்யவேண்டும்? தேவைப்படும் அரசாங்கக் கோப்புகளை எப்பாடுபட்டாவது களவாடி, ஃபோர்ஜரி செய்வது.

தேவைப்பட்டால் எதிரிகளைக் கடத்துவது, ஆவணங்களைக் கடத்துவது, எதிரி ராணுவ ரகசியங்களை ஒற்றறிந்து வருவது, ஆயுதங்களைக் களவாடுவது.

எதிரி ராணுவ அதிகாரிகளையும் வெளி நாட்டு சுற்றுலாப் பயணிகளையும் கடத்துவது, கொல்வது. எதிரி ராணுவத்தினராலும் காவல் துறையினராலும் கைது செய்யப்பட்ட முஸ்லிம் சகோதரர்களை, எப்பாடு பட்டாவது விடுவிப்பது. எதிரியைக் குறித்த வதந்திகளையும் அச்சமூட்டும் விவரங்களையும் பொதுமக்களிடம் தொடர்ந்து பரப்பிக்கொண்டிருப்பது. எதிரி தேசத்துக் கேளிக்கை மையங்களை வெடிவைத்துத் தகர்ப்பது.

எதிரி தேசங்களின் தூதரகங்களையும் பொருளாதாரக் கேந்திரங்களையும் வெடி வைத்துத் தகர்ப்பது. (இந்தக் குறிப்பினைக் கொண்டுதான் இக்கையேடு, 1998-க்கு முன்னதாக

எழுதப்பட்டிருக்கவேண்டும் என்று யூகிக்க வேண்டியிருக்கிறது. இதன்பின்தான் கென்யா மற்றும் தான்சானியாவில் உள்ள அமெரிக்கத் தூதரகங்கள் தாக்கப்பட்டன.)

முக்கிய நகரங்களை இணைக்கும் பாலங்களை வெடி வைத்துத் தகர்ப்பது.

நீண்ட நாள் இலக்காக, 'உலக முஸ்லிம்களின் விடுதலை' என்பதை முன்வைத்து மேற்கொள்ளப்படும் குறுகிய கால நடவடிக்கைகளாக, மேற்சொன்னவற்றைப் பின்பற்றவேண்டும் என்பதுடன் முதல் பாடம் முடிகிறது.

இக்கையேட்டின் இரண்டாவது பாடம், போராளிகளின் தகுதி பற்றியது. ஓர் அல் காயிதா போராளியின் அடிப்படைத் தகுதியாக இக்கையேடு சொல்வது, அவர் ஒரு முஸ்லிமாக இருக்கவேண்டும் என்பதுதான். 'கிறிஸ்துவர்களும் யூதர்களும் கம்யூனிஸ்டுகளும் போலி மதச்சார்பின்மைவாதிகளும் எப்படி நமக்காகப் பாடுபடுவார்கள் என்று எதிர்பார்க்கமுடியும்?' என்று கேட்கிறது இக்கையேடு.

தவிரவும் தலைமையைக் கேள்வி கேட்காத, அப்பட்டமான அடிபணியும் குணம், ஒரு முக்கியத் தகுதியாக முன்வைக்கப்படுகிறது. ராணுவத்தின் ஆதார இலக்கணமே அதுதான் அல்லவா? அதேசமயம், சிறுவர்கள் கண்டிப்பாக இயக்கத்துக்குத் தேவையில்லை என்று அடித்துச் சொல்கிறது. 'நாம் செய்வது மிகவும் ஆபத்தான, தொடர்ச்சியான, கடினமான பணி. இதற்கு மனத்தளவிலும் சிந்தனை அளவிலும் புத்திசாலித்தனத்தின் அளவிலும் மிக மேலான முதிர்ச்சி தேவைப்படுகிறது. குழந்தைகள் இப்பணிக்குச் சரிப்படமாட்டார்கள். மேலும், இறைவன் பெயரால் யுத்தத்தில் உயிர் விடச் சித்தமாக இருப்பவர்கள் மட்டுமே நமக்குத் தேவையாக இருக்கிறார்கள் என்கிற படியால், வருகிற அனைவரையும் ஏற்பது இயலாது' என்கிறது இக்கையேடு.

மூன்றாவது பாடம், நிதியை எப்படிக் கையாள்வது என்பது குறித்துப் பேசுகிறது. 'எத்தனை பணம் வந்தாலும் சரி, இரண்டாகப் பிரி. ஒன்றைப் பாதுகாப்பான முதலீடுகளில் போடு. அது பிற்காலத்துக்கு உதவும். இன்னொன்றை உடனடிப் பணிகளுக்கு அளந்து அளந்து பயன்படுத்து. பணத்தை மொத்தமாக ஒரே இடத்தில் சேர்த்து வைக்காதே. இயக்கத்தின் அத்தனை உறுப்பினர்களுக்கும் பணம் எங்கே இருக்கிறது என்கிற விஷயம் தெரியவேண்டிய அவசியம் இல்லை. பணத்தைக் கையாளக்கூடிய அனுமதி படைத்த கமாண்டர்கள் மட்டும் செய்தால் போதும். ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்துக்குப் பெரிய அளவில் பணத்தை எடுத்துச் செல்வதென்றால், மிகவும் பாதுகாப்பாக எடுத்துச் செல்லவும். ஒரு படையையே பாதுகாப்புக்கு அழைத்துச் சென்றாலும் பாதகமில்லை. ஒவ்வொரு பைசாவும் ஏழை முஸ்லிம்களின் ஒவ்வொரு சொட்டு ரத்தம் என்பதை மறந்துவிடாதீர்கள். தேவைப்பட்டால், இயக்கத்தில் இல்லாத வெளி ஆளிடம் விவரம் சொல்லாமல் பணத்தைக் கொடுத்துவைத்து, தேவைக்கேற்ப உபயோகித்துக்கொள்ளலாம். ஆனால், ஜாக்கிரதை!'

இப்படி விரியும் இந்தப் பாடங்கள் ஒவ்வொன்றும், தேவையான இடங்களில் வரைபடங்களையும் கொண்டிருக்கிறது. எல்லாமே கையால் வரைந்து அப்படியே அச்செடுக்கப்பட்ட படங்கள்.

அல் காயிதா மிகவும் கவனம் செலுத்தும் விஷயங்கள் இரண்டு. ஒன்று, தங்குவதற்கு அபார்ட்மெண்டுகளை வாடகைக்கு எடுக்கிற விஷயம். இரண்டாவது, ஆயுதங்களை பத்திரமாகப் பராமரிப்பது, கையாள்வது தொடர்பானது.

இந்த இரண்டு விஷயங்கள் குறித்துத்தான், இந்தக் கையேட்டில் பக்கம் பக்கமாக எழுதப்பட்டிருக்கிறது. முதலில் அபார்ட்மெண்ட் விஷயம்.

ஒசாமாவும் அவரது முதன்மைத் தளபதிகளும் அதிகம் கவலைப்படும் விஷயம், தம் இயக்கத்தின் போராளிகளின் பெயர்கள் சம்பந்தப்பட்டது. ஒவ்வொருவரும் ஒவ்வொரு தேசத்திலிருந்து

வருபவர்கள். ஒவ்வொரு பிராந்தியத்துக்கும் ஒவ்வொருவிதமான கலாசார அடையாளம் இருக்கும். அதற்கேற்ப, போராளிகளின் பெயர்கள் அமையும்.

வேறு வேறு பிராந்தியங்களைச் சேர்ந்த போராளிகளை, ஒரு திட்டத்துடன் ஏதாவது ஒரு தேசத்துக்கு அனுப்பி, அபார்ட்மெண்ட் வாடகைக்கு எடுத்துத் தங்கச் சொன்னால், முதலில் கேட்கப்படுகிற விஷயம், உங்கள் பெயர் என்ன?

ஏதாவது ஒரு முஸ்லிம் பெயர்தான் சொல்வார்கள் என்றாலும், ஒவ்வொருத்தர் சொல்லும் பெயரும் ஒவ்வொரு தேசத்தைச் சுட்டிக்காட்டினால், வீட்டு ஓனருக்கு சந்தேகம் வந்துவிடும். உதாரணத்துக்கு நம் ஊரில் அல்லா பிச்சை என்று ஒரு பெயர் இருக்கிறது. கடவுள் போட்ட பிச்சை என்கிற நல்ல அர்த்தம் தரும் பெயர். இந்தப் பெயருடன் ஒருத்தர் அமெரிக்காவுக்குப் போய் வாடகைக்கு ரூம் கேட்டால், முஸ்லிம்தானா என்றே சந்தேகப்படலாம் அல்லவா? இம்மாதிரியான குழப்பம், எல்லா தேசங்களிலும் இருக்குமல்லவா? அதுதான் விஷயம்.

ஆகவே, எந்த ப்ராஜெக்டுக்கு எத்தனை பேர் போனாலும், முதல் காரியமாக அவர்கள் அனைவருக்கும் சந்தேகம் எழாத பொதுவான பெயர்களைச் சூட்டுவது மிக முக்கியம் என்கிறது இந்தக் கையேடு.

வாடகைக்கு எடுக்கும் வீடுகள் அல்லது அபார்ட்மெண்டுகளைப் பெரும்பாலும் நகர்ப்புறங்களிலேயே பார்க்கும்படி அறிவுறுத்துகிறார்கள். தகவல் தொடர்பு வசதி கருதி, இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கலாம். ஏதாவது பிரச்னை வந்தால் மட்டும் புற நகரங்களுக்குத் தப்பித்துவிட வேண்டும். அப்படி, வாடகைக்கு ஓர் இடத்தைத் தேர்ந்தெடுத்துவிட்ட பிறகு, தாங்கள் வந்த காரியத்துக்கு ஏற்ப இருப்பிடத்தில் சௌகரியங்களை உருவாக்கிக்கொள்ள வலியுறுத்துகிறது இந்தக் கையேடு.

என்ன காரியத்துக்காக ஓர் அபார்ட்மெண்டை வாடகைக்கு எடுக்கிறோம்? சந்தித்துப் பேசுவதற்கா? ஆயுதங்களைப் பதுக்கிவைப்பதற்கா? யுத்த ஆயத்தங்களுக்காகவா? எதுவாக இருந்தாலும் தரைத்தளத்திலேயே வீடு பார். தப்பிப்பதற்கு அதுதான் சுலபம்.

எந்த இடத்தில் வீடு பார்த்தாலும், உடனடியாக வீட்டுக்காரராலேயே கண்டுபிடிக்க முடியாதபடி, ஒரு ரகசிய இடத்தை அங்கே ஏற்படுத்திக்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்துகிறார்கள். காலி செய்துகொண்டு போகும்போது, ஒரு துரும்பைக்கூட விட்டுவரக்கூடாது என்பது சிவப்பால் அண்டர்லைன் செய்யப்பட்ட தங்க விதி!